www.padippakam.com

# சமைகள்


சமைகள்-13 ஆனி-ஆடி-ஆவணி1995 Sumaihal Nr. 13, juni/juli/august 1995, Tromsø, Norge Løssalg kr. 10,-

## பண்டா, செல்வா ஒப்பந்த வரிசையில் ..............

# மக்களை ஏமாற்ற "புதியதோர்" பிரேரணை!

**இலங்கை அரசால் முன்வைக்கப்பட்ட பிரேரணையானது அரசால் வகுக்கப்பட்ட இராஜதந்திர அடிப்படையிலான வெறும் கண்துடைப்பே!**

சந்திரிக்காவின் அரசானது இந்தமாத ஆரம்பத்தில் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இலங்கை சுதந்திரம் அடைந்த பிற்பாடு இப்படியான பல தீர்வுகளையும், ஒப்பந்தங்களையும், பல தடவைகள் சந்திதித்து விட்டனர். இறுதியா, இந்தியத் தலைமீட்டால் ஏற்படுத்தப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம், எந்த நிலையை இறுதியில் சென்றடைந்ததென்பது யாவரும் அறிந்ததே.




இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கும் தற்போது சந்திரிக்கா முன்வைத்துள்ள தீர்வுப் பிரேரணைக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், முன்பு ஐக்கிய தேசியக் கட்சி இந்திய ஏகாதிபத்தியத்திற்கு பயந்து தீர்வுக்கு உடன்பட்டது, சந்திரிக்கா தனது அரசை தொடர்ந்து நடத்த தேவையான நிதியை பிச்சையெடுப்பதற்காக, மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களை திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. இதனடிப்படையில் நடைமுறையில் சாத்தியப்படாத திட்டமொன்றை முன்வைத்துள்ளார்.

உள்நாட்டு அரசியலில் பொருளாதாரத்தை தனியார் மயப்படுத்தி, உலக வங்கியின் ஆலோசனைப்படி, ஏகாதிபத்திய சுறண்டலுக்கு இலங்கையில் மென்மேலும் வளிவகுப்பதே தனது ஆட்சியைத் தொடர ஒரோவளியென சந்திரிக்கா அறிவார். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசானது மேற்கூறிய வளிமுறையைப் பாவித்தே பலவருட ஆட்சியை இலங்கையில் நடாத்தியது. அதேவளியில் சந்திரிக்கா அம்மையாரும் தொடர்கிறார்.

*பிரேரணை ஓர் சுத்துமாத்து*

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் படி இனப்பிரச்சனைக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட "மா்னில சுயாட்சி" தீர்வுடன் ஒப்பிடும் போது

7 பக்கம் பாற்க ☞

# சந்திரிக்கா அரசால் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வுத் திட்டம்

நாட்டின் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் உத்தியோக பூர்வமாக முன்வைக்கப்பட்டுள்ள சமாதானத் தீர்வுத்திட்டம்.

(அ) சகல சமூகங்களும் பாதுகாப்புடனும், பந்தோபஸ்துடனும் வாழக்கூடியதும் அவைகளின் கௌரவத்தினை மதிக்கக் கூடியதும், சமமாக மதிக்கப்படுதல், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாக விளங்கக் கூடியதுமான இலங்கைபற்றிய தொலை நோக்கினை முன்னேற்றுவித்தல்.

(ஆ) சகல சமூகங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்தலும், அந்த தனித்துவத்தை மேம்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதலும், இதில் தமது செந்தக் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கும், தமது செந்த மதத்தில் பற்றுறுதி கொள்வதற்கும், வழிபடுவதற்கும் தமது சொந்த மொழியை பெணி வளர்ப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான உரிமையும், தாம் விரும்பிய தேசிய மொழியில் அரசுடன் அலுவல்களைக் கையாளுவதற்கான வாய்ப்பினையும் உறுதி செய்தல்.

(இ) அனைத்து ஆட்சிகளும் எவ்வித ஓரங்கட்டலும் இன்றி சட்டத்தின் முன் சமமாக தமது மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் பூரணமாகவும் வினைத்திறனுடனும் பிரயோகிப்பதை உறிப்படுத்தல்.

(ஈ) சிங்கள மெழியையும், தமிழ் மொழியையும் அரசு கரும மொழியாக அங்கீகரித்தலும், ஆங்கில மொழியை தொடர்பு மொழியாக அங்கீகரித்தலும்.

7 பக்கம் பாற்க ☞

படிப்பகம்

உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்றுசேருங்கள்! Arbeidere og undertrykte i alle land - foren dere!

www.padippakam.com



## சுமைகள்

எமது நாட்டில் நாளுக்கு நாள் அரசியல் சூழ்நிலை மாறி வருகின்றது. இன்று இலங்கை மக்களின் தலைவிதியை தீர்மானித்துக் கொண்டிருக்கும் உலகவங்கியின் கைக்குழந்தையான சத்திரிக்கா அம்மையார் பல வடிவத்தில் இனப்பிரச்சனைக்கு தீர்வை முன்வைக்க முயல்கின்றார். இதில் வேடிக்கை என்னவெனில் வெளியுலகிற்கு பூச்சாண்டி காட்ட தீர்வை முன்வைக்க முயலும் இவர் அதேவேளை இராணுவத் தாக்குதல்களை, முன்னைய அரசிலும் விட புதிய யுத்திகளைக் கையாண்டு நடத்தி வருகின்றார். மேலும் முஸ்லீம்களையும் மறுபுறத்தில் தாக்கியவண்ணம் செயற்படும் இவருக்கு மலையக மக்களும் ஒரு விளையாட்டு பொம்மைகளே. இவ்வாறு சமாதானத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் இவர் ஆட்சிக்கு வரும் போது சமாதானத்தை கொண்டுவருவேன் எல்லா இனமக்களும் சமாக வாழும் நிலை இலங்கையில் உருவாகும் என கூறிய வார்த்தைகளை மறந்து விட்டாரோ அல்லது அது மேடைப் பேச்சுத் தானே என எண்ணி அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாது இருக்கின்றாரோ தெரியவில்லை. அல்லது தமிழர்களும், முஸ்லீம்களும் இல்லாதொழிக்கப்படும் போது இனப்பிரச்சனைக்கு தீர்வு வரும் என்று எண்ணுகிறாரோ தெரிவில்லை.

அண்மையில் சந்திரிக்கா முன்வைத்த தீர்வின் நோக்கம் பிரச்சனைக்கு தீர்வு காண்பதல்ல. மாறாக சர்வதேச ரீதியிலும், மக்கள் மத்தியில் புலிகளை அன்னியப்படுத்தவும், தமிழர்களையும் மற்றும் சிறுபான்மை இனங்களையும், சர்வதேசரீதியில் பயங்கர வாதிகளாகப் பிரகடனப் படுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்றுள்ள நிலையில் தீர்வை முன்வைத்தால் யுத்த நிறுத்தத்துடன், பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்திய பின்னரே தீர்வு வைக்கப்படல் வேண்டும். இதற்கு மாறாக புலிகளுடன் அரசு பேச மறுப்பதுடன், யுத்தத்தையும் தொடர்ந்து நடத்துகிறது. யார்மறுத்தாலும் இன்று நிரந்தர சமாதானமும், பிரச்சனைக்கு தீர்வும் காணப்பட விரும்பினால் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும். புலிகளை வெளியில் விட்டு தீர்வை முன்வைப்பது என்பது குள்ள நரித்தனமாகும்.

இதைவிட இன்று யுத்தம் தொடரப்படும் போது அதனால் பாதிக்கப்படுவது தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் தான். தமது வீட்டின் அடுப்படியில் பூனை படுக்கக் கூடாது என்பதற்காக தனது உயிரையும் துச்சம் என மதித்து வேலைக்கு சேரும் இராணுவ வீரர்களும், புலிகளின் சில நடவடிக்கையால் ஆத்திரம் உற்றவர்களும் இவ்வரசின் இனவாத செற்பொழிவுகளுக்கு மயங்கி இராணுவத்தில் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.

இடைக்கால தீர்வு தேவை அதை நாம் இப்போதும், எப்போதும் வலியுறுத்துகிறோம். அதற்காக இடைக்காலத்தீர்வுதானே நாம் நாய்களாக நடத்தப்பட்டாலும் பறவாயில்லை என்ற வகையில் கோரவில்லை மாறாக அடப்படை உரிமைகளுடனேயே கோருகின்றோம். இது எமது இனத்திற்கு மட்டுமல்ல மாறாக அனைத்து இலங்கைவாழ் மக்களுக்கும் பொருந்தும்.

தற்போது ஒருசில புத்திஜீவிகள் சந்திரிக்காவின் இச்செயற்பாட்டை பாராட்டி வருகின்றனர். இவர்களுக்கு யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என்ற சிந்தனை இருக்கின்றதோ இல்லையோ, தமது நலன் பாதுகாக்கப்பட்டு தாம் சமாதானத்தை விரும்புபவர்கள் என்ற பெயர் பெறவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். இவர்களைப் போன்றோர்கள் இருக்கும் வரை தமிழர்களின் பிரச்சனை மட்டுமல்ல உலகின் எந்தப்பிரச்சனைகளும் தீரப் போவது இல்லை. இவர்களுக்கு அழகான பெயர் உண்டு அதுதான் "கோடாரிக் காம்புகள்".

# ஐரோப்பிய அரசுகளுக்கு நாம் வேண்டாதவர்களா?

**S. Chandra**

ஐரோப்பிய நாடுகளுக்கு வருவதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு நாடுகளில் இருந்து முயற்சித்த வண்ணம் உள்ளனர். இவர்களின் முயற்சிக்கு பல காரணங்கள் இருக்கின்ற போதும், அதில் பலர் தாம் இலங்கையில் இருந்தால் தமது உயிருக்கு ஆபத்து என்பதினாலும், மற்றும் சிலர் தாழ்ந்து கிடக்கும் தமது குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தினாலுமே இங்கு வர முயற்சிக்கின்றனர். இவர்களின் இம்முயற்சியானது வெற்றியடையாமல், பலதடவை முயற்சித்து சிலர் சிலவேளை வெற்றி அடைந்துள்ளனர். இவர்களில் அனேகமானோர் தோல்வியையே தழிவியுள்ளனர். இவ்வாறான நிகழ்வுகளுக்கு அடிப்டைக் காரணம் இங்கு வந்து தாம் பட்டு வரும் கடனை நிவர்த்தி செய்து விடலாம் என்ற எண்ணம் தான். ஆனால் பலருக்கு இங்கிருக்கும் நிலை தெரிவதில்லை. ஐரோப்பிய நாடுகள் என்றதும் சுதந்திரமாக எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற கருத்து பலருக்கு உண்டு. உண்மையில் அப்படியல்ல இந்த நாடுகளின் சமூகக் கட்டுமானம் ஒரு தனிமனிதன் எப்படி வாழ வேண்டும் என்று வரையறை வகுத்துள்ளது. அதன் படி நாம் அச்சமூகக் கட்டுமானத்தின் கீழ் உணராமல் வாழ்கின்றோம்.

இவ்வாறான நிலையில், ஐரோப்பிய நாடுகளில் குடியேறியவர்களின் வாழ்கைநிலை உள்ளபோது புதிதாக பலர் இந்நாடுகளுக்கு வர முயற்சிக்கின்றனர். இவர்களின் இம்முயற்சி தற்போதைய ஐரோப்பிய நாடுகளின் அகதிகள் அரசியலை அறியாது, தமது பணத்தை செலவிடவே வழிவகுக்கிறது. இன்று ஐரோப்பிய அரசியல் சட்டமானது எந்தளவிற்கு அகதிகள் வருகையை குறைக்க முடியுமோ அந்தளவிற்கு குறைப்பதற்கு ஏற்றாற் போல் வகுக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு நோர்வேயை எடுப்போமானால் முன்பு அகதியாக ஒருவர் வருவாராயின் அவருக்கு அரசியல் தஞ்சம் அல்லது மனிதாபிமான ரீதியான வதிவிட வசதி (பொருளாதார தஞ்சம்) போன்றவை வழங்கப்பட்டு வந்தன. அதற்கு நோர்வே அரசினால் கேட்கப்படும் கேள்வி வருபவருக்கு தற்போது நாட்டில் என்ன பிரச்சனை என்று. ஆனால் தற்போது அவ்வாறல்ல வரும் நபருக்கு என்னபிரச்சனை என்பது போக, அவரின் குடும்பம் எங்குள்ளது, என்னமாதிரி அவர்களின் வாழ்கை நிலை, இதுவரை காலமும் என்ன செய்தீர்கள், சகோதரர்கள் இருப்பின் அவர்கள் என்ன செய்கின்றனர் என்பவற்றைக் கேட்டறிந்து அவை உண்மை தானா என்பதை ஊர்யிதப் படுத்துவதற்காக நாட்டில் வசிக்கும் பெற்றோர்களிடம், உறவினர் அல்லது அவ்வூர் வாசிகளிடம் சென்று விசாரிக்கின்றனர். இவ்விசாரணையில் இங்கு வந்தவர் கூறிய வாக்கு மூலத்திற்கும் நாட்டில் உள்ளவர்கள் கூறும் வாக்கு மூலத்திற்கும் எந்தளவு ஒற்றுமை உண்டு என்பதை ஆராய்ந்து அதன் பின்னரே அகதியாக வந்தவருக்கு வதிவிட அனுமதி வளங்கப்படுகின்றது. சில வேளை அகதியாக வந்தவர் கூறிய வாக்கு மூலத்திற்கும் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் கூறும் வாக்கு மூலத்திற்கும் இடையில் முரண்பாடு காணப்படின் வதிவிட அனுமதி மறுக்கப்படுகின்றது.

இதில் வேடிக்கையான விடையம் என்னவெனில் (இலங்கையில்) கொழும்பில் அகதியாக விண்ணப்பிப்பவருக்கு யாராவது உறவினரோ அல்லது தெரிந்தவரோ இருக்கின்றனர் என வாக்கு மூலத்தில் கூறுவாராயின் எந்தவித மறுகேள்வியும் இல்லாது அகதியாக வந்தவருக்கு வதிவிட அனுமதி மறுக்கப்படும். இதற்கு இவர்கள் கூறும் காரணம் கொழும்பு, தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் என்று. உண்மை அதுவல்ல. மாறாக கொழும்பு பாதுகாப்பான இடம் என கூறி வதிவிட அனுமதி மறுப்பதன் மூலமும் அல்லது தமிழர்களை திருப்பி அனுப்பம் போதும் அகதிகளின் வருகையும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவர்கள் கொழும்பு தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் எனக் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் ஏற்கனவே நோர்வேக்கு வந்த தமிழர்களில் பலருக்கு நோர்வே பிரஜாவுரிமை கிடைத்துள்ளது. பிரஜாவுரிமை கிடைத்ததும் தாம் ஏற்கனவே பொலிஸில் கொடுத்த வாக்கு மூலத்திற்கு முரணாக ஒரு சிலர் பெட்டிகட்டிக் கொண்டு இலங்கையில் என்ன பிரச்சனை நடந்தாலும் இலங்கைக்குப் பிரயாணம் போய் வருகின்றனர். இவற்றை கணக்கில் எடுக்கும் நோர்வேஜிய வெளிநாட்டமைச்சு தற்போது தமிழர்களுக்கு கொழும்பில் பிரச்சனை இல்லை எனக் கூறி தமிழர்களை திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. தமக்கு பிரஜாவுரிமை கிடைத்துவிட்டது தானே என தம்மை மாத்திரம் யோசிக்கும் ஒரு சில தமிழர்களால் எத்தனை ஆயிரம் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

இன்று பல தமிழர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டும், அனுப்பப்படவும் உள்ளனர். இதில் மாணவர்களாக வந்தவர்களும், புதிதாக(வதிவிட அனுமதி பெறாதவர்கள்) வந்தவர்களும் அடங்குவர். இதில் புதிதாக வருபவர்களுக்கு ஏஜன்சியினால் இங்கு தற்போது இருக்கும் நிலை விளக்கமாகக் கூறப்படுவதில்லை. அத்தோடு வருபவர்களும் தாம் இங்கு வந்தால் போதும் அதன்பின் என்ன பிரச்சனை நடந்தாலும் அதை சமாளித்துக் கொள்ளலாம் என்ற கருத்துடனே வருகின்றனர். இங்கு வந்த அவர்களுக்கு வதிவிட அனுமதி மறுக்கப்பட்டு சிலர் மேன்முறையீடு செய்து பெற்றுள்ளனர். சிலருக்கு அங்கும் அனுமதிமறுக்கப்பட்டு இறுதியில் கிறிஸ்தவ கோவில்களில் தஞ்சம் கோறியுள்ளனர். கோவில் தஞ்சம் ஒருபோதும் வெற்றி தரும் எனக் கூறமுடியாததுடன் அங்கு தனிமையில் மற்றவர்களின் உதவியை நாடி வாழவேண்டிய நிலையும் உள்ளது. இருப்பினும் மற்றவர்கள் (நோர்வேயியர், தமிழர், மற்றைய நாட்டவர்) தம்மால் இயன்ற உதவியை செய்வார்களாயின் கோயில் தஞ்சம் கடினமான விடையம் அல்ல. இருந்தபோதும் தஞ்சம் கோரியவரின் வதிவிட அனுமதி தொடர்பான பிரச்சனைகள் சற்றுக் கடினமானதாக இருக்கும். இவற்றை எல்லாம் அறிந்த நிலையிலும் தாம் நாடு சென்றால் தமது உயிருக்கு ஆபத்து நேரும் என்ற நிலையில் ஒரு சில தமிழ் இளைஞர்கள் கோவில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களுக்கு வெளியில் வசிக்கும் நாம் தான் எம்மால் இயன்ற உதவியை செய்ய வேண்டும். இதுமட்டுமல்ல 26.5.95 அன்று காலை அகதியாக வந்த இரு தமிழ் இளைஞர்களை நோர்வே அரசு இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது. இதற்கு அடிப்படை காரணம் கொழும்பு தமிழர்கள் பிரச்சனை இல்லாது வாழக் கூடிய இடம் என்ற கருத்துத்தான்.

மெத்தத்தில் ஐரோப்பாவில் நாமெல்லாம் வேண்டாத மனிதர்களாகவே நடத்தப்படுகிறோம் நிறவாதம் ஒருபக்கம், ஐரோப்பிய அரசுகளின் நிறவாத அரசியல் மறுபக்கம். இருபக்கமும் இடிதாங்கியபடி இங்கு நாயிலும் கீழான சீவியம் சீவிக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இந்நிலை தொடருமானால் எம் சமூகம் அழிந்து போகும் நிலைக்கு தள்ளப்படும்.

வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $

**Redaksjon:**
Sumaihal redaksjonskommite.
**Produksjon og distribusjon:**
Sumaihal.
**Layout og produksjons-ansvarlig:** Henrik Ormåsen.
**Trykk:** Bladet Tromsø i et opplag på 2000.

**Kontoradresse:**
Bankgt.1, 9001 Tromsø
**Tlf:** 77 65 65 91
**Kontortid:**
Ons. 17.00-20.00
Fre. 13.00-17.00
**Postadresse:**
Boks 415, 9001 Tromsø

படிப்பகம்

www.padippakam.com



## சொந்தச் சகோதரர்கள் .......

# துன்பத்தில் சாதல் கண்டும்......... !

**K. Karuna**

தமிழர்கள் தஞ்சம் கோரிய ஐரோப்பிய நாடுகள், தற்போது திப்பியும், இலைங்கைக்கு திருப்பி அனுப்பத் தொடங்கியுள்ளன.இந் சிலை 1992 இல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் ஸ்கன்டனேவிய நாடுகள், ஐரோப்பிய அகதி அரசியல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் ஆரம்பமாகியது.

இதை எதிர்த்து ஆங்காங்கே வாழும் தமிழர்களும் மற்றும் ஐரோப்பிய இடதுசாரி இயக்கங்கள், மனிதாபிமான ஸ்தாபனங்கள் குரல் கொடுத்து வருகின்றனர். நோர்வேயில் தமிழ் அமைப்புக்கள் தனிநபர் மற்றும் இடதுசாரி அமைப்புகள், மனிதாபிமான இயக்கங்கள்கள் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

இக்கட்டுரையில் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு எதிரான போராட்டங்கள் பற்றியோ அல்லது ஐரோப்பிய நாடுகளின் நிறவாத அகதி அரசியல் பற்றியோ நான் எழுத வரவில்லை. இவ் வடையங்கள் பற்றி பல தமிழ் "புத்திஜீவிகள்" ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் "ஆய்வுகள்" செய்து வருகின்றனர். ( சுமைகளிலும் சிலர் "ஆய்வு" செய்ய முன்வந்துள்ளனர்).

மாறாக நான் இங்கு, 1) எம்மவர் பலர் தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்து தேடி விண்ணப்பித்து விட்டு காத்திருக்கையில், நாட்டில் (இலங்கையில்) நடக்கும் யுத்தம், அங்கு வாழும் மக்கள் பற்றி எந்த வகையான கருத்துக்களை சிந்தனையில் கொண்டுள்ளோம். 2) இலங்கையின் அரசியல் மாற்றம் புலம்பெயர்ந்த எம்மை எந்த விதத்தில் பாதிக்கின்றது. 3) எமக்கு நிரந்தர வதிவிட அனுமதி புகலிடத்தில் கிடைக்கும் வரை எவ்வகையான அரசியல் சூழல் இலங்கையில் நிலை கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறோம்? (உதாரணமாக யுத்தம் தொடர விரும்புகிறோமா அல்லது நிரந்தரத் தீர்வு வேண்டுமென விரும்புகிறோமா?). 4) அரசியல் கட்சிகள், இயக்கங்களுக்கு புலம் பெயர்ந்த சமூகத்தில் வாழும் நாம் எவ்வித கருத்தியலின் அடிப்படையில் பண உதவியோ அல்லது உழைப்பையோ வழங்குகிறோம். ...... — போன்ற சில கேள்விகளை உங்கள் முன் எழுப்புகிறேன். இக்கோள்விகளை விரிவாக, ஆழமாக ஆராய்வதற்கு உதவியாக சில சம்பவங்களை இங்கு குறிப்பிடுவதுடன், இச்சம்பவங்கள் ஊடாக கேள்விகளுக்கு பதிலைக்கான முயற்சிக்கிறோன். மேலும் இக்கட்டுரையில் நோர்வேயில் லாழும் தமிழர்களைப் பற்றியே ஆராய முனைகிறோன்.

*புலம் பெயர்வு*

ஆடி 1983 இன் பின் நம்மவர் புலம்பெயரத் தொடங்கினர். புலம்பெயர்வு 1986 இன் பின் பலமடங்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்பிற்கு காரணங்கள் பலவாக இருந்த போதும் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது புலிகள் ரெலோ வை அழித்ததுடன் மாற்று அரசியல் இயக்கங்களை தடைசெய்து அழிக்க முயன்றதாகும். புலிகளின் இவ் ஜனநாயக மறுப்பு நடவடிக்கையானது தமிழீழக் கனவு கண்ட மத்தியதர தமிழ் மக்களின் கனவுக்கோட்டைகளை தகர்த்தது. தடைசெய்யப்பட்ட இயக்கங்களில் ஆயிரக்கணக்கில் கெரில்லாப்பயிற்சி பெற்ற மத்தியதர வர்க்க யாழ்பானத்தவர்கள் செய்ய வழியறியாது ஐரோப்பா, கனடா தேடிப் புலம்பெயர்ந்தனர். (வறியவர்கள் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து இனஇனும் பலர் அங்கேயே சீவிக்கின்றனர்.)

இக்காலகட்டத்தில் நடைபெற்ற புலப்பெயர்வானது கெரில்லாஇயக்க இளைஞ்ஞர்களை மட்டும் உள்ளடக்கியதல்ல, பல புத்திஜீவிகள், அறிஞ்ஞர்கள், வைத்தியர்கள் போன்ற மேல்தட்டு வர்க்கத்தையும் உள்ளடக்கியது.

மேற்கூறிய மேல்தட்டு வர்க்க புத்திஜீவிகளும், இயக்க இளைஞ்ஞர்களின் புலப்பெயர்வும் 1986இல் அரம்பித்து இந்திய இராணுவம் இலங்கையை விட்டுப் போகும் வரை நீடித்தது. (86–90) இக்காலகட்டத்தில் 90 வீதமான மேற்கூறிய வகுப்பினர் புலம்பெயர்ந்தனர். புலிகள் இந்தியரிடம் இருந்து தமிழீழத்தை மீட்டு பிரேமதாசாவுடன் தேன் நிலவை முடித்துக் கொண்டதுடன் இரண்டாவது கட்டப் புலம்பெயர்வு அலைவீசத் தெடங்கியது. தேன் நிலவை முடித்த கையோடு புலிகள் யாழ்ப்பாணத்தில் அரசு கட்டத் தொடங்கினர். அன்று தொடங்கிய இரண்டாம் கட்டப் புலம்பெயர்வு இன்றும் தொடர்கிறது.

நான் ஆரம்பத்தில் கூறியது போல் நோர்வேக்கு புலம் பெயர்ந்தவர்களை அடிப்படையாக இக் கட்டுரைக்கு கொள்கிறேன்.

நான் வந்த வருடம் 1987 வைகாசி மாதம் நோர்வேயில் பலதரப்பட்ட அரசியல் கருத்துகள் தமிழர்கள் மத்தியில் காணப்பட்டது. இங்கு புலி, ரெலோ, ஈபிஆர்எல்எவ், ஈரோஸ், புலட் என ஐந்து இயக்கங்களுக்கும் ஆதரவாளர்கள் இருந்தனர்.

இவ்வியக்க ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் பலர் இங்கு மானவர்களாக இருந்தனர். மேலும் தமிழீழம் கிடைத்தவுடனே அல்லது ஏதாவது வகையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைத்தவுடனே உடனடியாக நாடு திரும்பி தமிழீழத்திற்கு சேவை சேய்வதாகக் கூறிவந்தனர். இவர்கள் இலங்கையில் நடந்த பிரச்சனை தொடர்வதால் நோர்வேயியன் அரசு திருப்பி ஆனுப்பாது என்னும் துணிவில் படிப்பை நிறுத்திவிட்டு வேலை செய்தனர்.

1987 ஆடி இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது, இயக்கங்கள் ஒப்பந்தத்தை ஏற்பதாக அறித்தன. இலங்கை மக்களிடம் பெரிய சந்தோசம், யாழ்பாணத்தில் இந்திய இராணுவத்திற்கு ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுகிறது. பிரபாகரன் தனது முதலாவது பொதுக்கூட்டத்தில் பங்கு பெற்றுகிறார். தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள, முஸ்லீம் மக்கள் அனைவருமே இலங்கையின் ஒப்பந்தம், தனது பறிக்கப்பட்ட வாழ்கை திரும்பவும் தம்மிடம் திரும்பிவிட்டதென மகிழ்ந்திருந்தனர்.

ஆனால் இங்கு (நோர்வேயில்) நடத்ததென்ன? இயக்கங்களுக்கு காசு சேர்த்தவர்கள், ஆதரவாளர்கள் என தமிழீழ விடுதலை கதைத்தவர்கள் ஆழ்ந்த கவலை கொண்டனர். இந்திய ஒப்பந்தத்தை புலிகள் பிற்காலத்தில் எதிர்த்தனர் ஆனால் புலிகளுக்கு முன் ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள் எனக்குத் தெரிய நோர்வே வாழ்ந்த தமிழர்கள் பலரே. இலங்கையில் பிரச்சனை தீர்ந்தால் தாம் அனுப்பப்பட்டு விடுவோமோ எனக் கவலை கொண்ட பலர் எந்தவிதப்பட்டாவது நோர்வேயில் இருந்துவிட முயன்றனர்.

படிப்பை நிறுத்திவிட்டு வேலை செய்தவர்கள், திரும்பவும் பாடசாலை அனுமதி தேடி அலைந்தனர், சிலர் நோர்வேஜீய நண்பிகளைத் திருமணம் செய்தனர். பலர் அகதி அந்தஸ்து கோரினர். எந்த எந்த இயக்கங்களுக்கு காசு சேர்த்தார்களோ, அந்த இயக்கத்தால் தாங்கள் கொலை செய்யப்படுவர் எனவும், இலங்கை அரசு தம்மைக் கைது பண்ணி சித்திரவதைக்கு உட்படுத்தும் எனவும் வாக்கு மூலம் கொடுத்தனர். 1987 ஆவணியிலிருந்துகார்த்திகை வரை 500 தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரினர்.

இது மதத்திரமன்று என்னுடைய நண்பர்களில் ஒருவர் சில லட்சங்கள் கொடுத்து அகதியாக வந்தவர் நானும் அவரும் ஒரே அகதி முகாமில் இருந்தோம். இலங்கையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அறிந்தவுடன் தனக்கு அகதி அந்தஸ்து கிடைக்காமல் போய் விடுமோ என்ற பதட்ட நிலைக்குத் தள்ளப்பட்டார். இலங்கையில் நடக்கும் இனப்பிரச்சனை பற்றி எதுவித கருத்தும் வெளிப்படையாக தெரிவிக்காத அவர் திடீரென இந்திய சமாதான ஒப்பந்தத்திற்கு எதிரான கருத்தை கலந்துரையாடும் போது வலியுறுத்தியதுடன் யுத்தம் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார். கிறிஸ்தவரான அவர் ஒப்பந்தத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்தது மாத்திரம் அன்றி தேவாலையத்திற்கு செல்லும் வேளை தனக்கு அகதி அந்தஸ்து கிடைப்பதற்காக பலமணிநேரம் வேண்டுதலை கடவுள் மூலம் சமர்ப்பித்தார்.

இலங்கையில் அரசியல் நிலைமாறி புலிகளுக்கும், இந்திய இராணுவத்திற்கும் யுத்தம் தொடங்க முன் புலிகள் இலங்கையில் யுத்த ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினர். இங்க நோர்வேயில் புலிகள் யுத்த நிதி சேர்த்த போது பல்லாயிரம் குரோணர்களை நோர்வே வாழ் அகதிகளும், மாணவர்களும் வளங்கி யுத்தம் தொடர உதவினர். மேற்படி நான் எழுதிய சம்பவங்களை ஆராய்ந்தால் ஓர் உண்மை தெரிய வரும். எந்த விலை கொடுத்தும் நாம் ஐரோப்பாவில், நோர்வேயில் இருக்க விரும்புகிறோம்.

மரணங்கள், இழப்புக்கள், பசி, பட்டினி எதுவும் எமது மனத்தை எருகச் செய்வதில்லை. 100 பிணம் இலங்கையில் விழுந்தால் எமக்கு ஐரோப்பாவில் அகதி அந்தஸ்து கிடைக்கும் எனும் ஈனப்புத்தி.

*1995 இல் நடப்பதென்ன*

1992 இல் இருந்து தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற நோர்வே அரசு முயல்கிறது இந்தவருடம் சிலரை இலங்கைக்கு அனுப்பியது. 87 இல் இருந்து போல் அதேநிலை இவ்வருடமும். புலிகளும், இலங்கை அரசும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இனப்பிரச்சனை தீர்க்கப்படலாம் என ஓர் அவிப்பிராயம் பரவலாகத் தொடங்கியது. அகதி அந்தஸ்து பெற்றவர்கள், பெறாதவர்கள் அனைவரும் திடீரென பெச்சு வார்த்தைக்கு எதிரானவர்களாயினர். யுத்தம் தொடங்கப்பட வேண்டும் என விரும்பினர். புலிகள் பேச்சு வார்த்தையை முறித்து யுத்தம் தொடங்கிய போது கைதட்டி வரவேற்றனர்.

கடந்த மாதம் இலங்கை அரசு யாழ்ப்பாணம் மீது பாரிய தாக்குதலை நடத்தியது. பல நூறு தமிழர்கள், புலிப் போராளிகளும் மரணமடைந்தனர். இங்கிருக்கும் எம்மவற்கோ உள்ளுக்குள் சந்தோசம் நோர்வேயிய அரசுக்குதந்தி அடித்தார்கள், "இலங்கையில் யுத்தம் நடக்கிறது அகதிகளை திருப்பி அனுப்பாதே!!! உடனே அனைவருக்கும் அகதி அந்தஇஸது வழங்கு!!". இலங்கையில் மரணங்களும், அவலங்களும் எமக்கு ஐரோப்பாவில் அகதி அந்தஸ்து வழங்கும் காரணிகள். ஏன் நாம் இப்படியான சிந்தனையைக் கொண்டுள்ளோம்?

ஏன் யத்தத்தை நிறுத்தும் படியும், சமாதானத்தை உருவாக்கும் படியும் எம்மால் குரல் கொடுக்க முடியவில்லை?

தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எந்த சிந்தனையின் அடிப்படையில் உதவி வளங்குகிறோம்?

எமக்கு அகதி அந்தஸ்து கிடைப்பதற்காகவா? அரசியல் கருத்தின் அடிப்படையில் எம்மில் பெரும்பாண்மையினர் தேசிய விடுதலைக்கு உதவுவதில்லை. புலி எதிர்ப்பாக இருந்தலேன்ன, வேறு அரசியல் கருத்தாக இருந்தாலேன்ன எம் சிந்தனை எமது சுயநல அடிப்படையிலேயே எழுகின்றது. எமது குறுகிய நலனுக்காக எதுவித சிந்தனையுமின்றி சமூக அழிவில் எம் வாழ்க்கையை கட்டியெழுப்ப முயல்வது மனிதத்தன்மையற்றது.

நான் இங்கு அகதியாக வருவதைப் பற்றிக் கதைக்கவில்லை. ஆனால் எந்த அடிப்படையில், எவ்வித மனிதாபிமான அடிப்படையில் இங்கு அகதி அந்தஸ்து கோருகிறோம்.

எமது கலாச்சாரம், தேசிய விடுதலை, உணர்வு, உயிர், மனிதத்தன்மை அனைத்தையும் இழந்து, ஏகாதிபத்திய ஐரோப்பியர்களுக்க அடகு வைத்து எத்தனை நாட்களுக்கு நாம் அகதி அந்தஸ்து கோரப்போகிறோம். நாம் மனிதராக வாழவேண்டுமெனின் எம் நாட்டில் நீதியும், நியாயமும், ஜனநாயகம் அடங்கிய அரசியல் மாற்றம் வரவேண்டும். இது வரவோண்டுமெனில் நாம் அனைவரும் சமூகசிந்தனையுடன் பிரச்சனைகளை அனுக வேண்டும்.

"சோந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காரடி கிளியே வாய்ச்செல்லில் வீரரடி ......." என்னும் பாரதிபாடல் எமக்குத்தான் இன்று பொருத்தமாயுள்ளது. இனியாவது, தேசிய விடுதலைக்கான உதவியை அரசியல் கருத்தின் அடிப்படையில் செய்வதற்கு முன்வருவோம்!!!

*மனித உயிரையும், இரத்தத்தையும் சமூக அழிவையும் வெள்ளையனுக்கு சாட்சியாகக்காட்டி அகதி அந்தஸ்து கோரும் நிலை மாறி, நீதியும், சமாதானமும் உள்ள நாடு உருவாகப் போரிடுவோம்.*

படிப்பகம்

www.padippakam.com



# ஓடிப்போனெ

" இந்தப் பொம்பிளையளுக்கு.......அடங்கிறேல்ல போல முரளி எவ்
பெடியன் அவனப் போல புருசன் கிடைக்க குடுத்தெல்லே வை

முந்தியெல்லாம் ! சொன்னது நீதானா சொல் சொல் சொல் என்னுயிரே ! என்ற சுசிலான்ர உருகிப் போகின்ற குரலுக்கு நான் என்னையே இழந்து ஒன்றி அழுது தீர்ப்பது பெரிய நிம்மதி எனக்கு. இப்ப எல்லாம் சுசிலான்ர சோகக்குரலைக் கேட்டால் எவ்வளவு கெதியா மாத்தி அடுத்த பாடலுக்கு விடமுடியுதோ அவ்வளவு விரைவில் மாத்தி போட வேண்டும். இந்த மாதிரி பாடல்களை இப்ப கேட்க ஏலாம போனதற்கு இப்ப இருக்கிற மனநிலை காரணமா அல்லது அந்த சோகம் , ஏக்கம், விரக்தி எரிச்சலூட்டுகின்றதா அல்லது சோகங்களையெல்லாம் எனது கால்களுக்கு கீழே போட்டு மிதித்து அவற்றிற்கு மேல் ஏறி நின்று இந்த சோகங்கள் என்னை எதுவும் செய்துவிட முடியாது நான் நானாக இருப்பேன் என்று எனக்குள்ளும் வெளியேயும் கேட்கக் கூடியளவு உரத்து கத்துகின்ற அளவுக்கு வலுவடைந்து விட்டேனா அல்லது ஒவ்வொரு வீழ்ச்சியின் பின்னும் சோர்ந்து விழுந்து விடாமல் நடமாடுகின்றேன் என்பதா என்று தெரியவில்லை?.

நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தின் நெறிகளுக்கு, வரம்புகளுக்கு உட்பட மறுத்தால் நான் இந்த சமூகத்தின் அங்கத்தவர் அல்ல. அப்போ எனக்கு வேறு பல பெயர்கள். ஆட்டக்காறி. ஓடிப்போனவள் என்னுடைய அம்மாவையும் சேர்த்து இழுத்து வைத்து சூட்டப்படும் பெயர்கள். . இந்தப் பெயர்கள் என்னைப் போல் பலருக்குண்டு. பெயர்களும் இந்த சமூக அங்கத்தவர்கள் எம்மை நடாத்தும் விதமும் எமக்குள் பொதுவான விடயமாக இருந்தாலும் எமக்குள் நிறையவே வேற்றுமைகள் உண்டு. ' பெயர் பெற்ற ' எம்மிர் பலர் ஒருதடவை பெயர் எடுத்தது போதும் இயன்றவரை அதைச் 'சரி செய்து ' மீண்டும் இந்த சமூகத்தில் ' பூவுடனும் பொட்டுடனும் ' இணைந்துவிட கடுமையாக முயறசிப்பதும் முயற்சி பலன் அளித்ததும் சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்கள் போல சமூக நடைமுறைகளை கடக்க முயல்பவர்களையும் ,, கடந்தவர்களையும் பற்றி நாக்கு வளைப்பதில் பாண்டித்தியம் பெற்று விடுவது வாழ்க்கையின் ஒருபக்கம்.

நான் ஓடித்தான் போனேன். ஒருதடவையல்ல . இரண்டு மூன்று தடவைகள். இன்னும் எத்தனை தடவைகள் ஓடுவேன் என்பதும் சொல்வதற்கில்லை. ஏனெனில் என்னுடைய ' ஓட்டங்களுக்கு' நான் மட்டும் காரணகர்த்தா என்று நான் நினைக்கவில்லை. அதேபோல் ஓடிப்போனவள் என்று என்னை மட்டும் சுட்டிக் காட்டுவதையும் முகத்தை திருப்பிக் கொள்வதையும் பக்கத்தில் உள்ளவரை சுரண்டுவதையும் ஏதோ ' கொலைக் குற்றம் செய்து விட்ட குற்றவாளியைப் போல பார்ப்பதையும் தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

நான் முதன்முதலில் 83ல் ஓடிப் போனேன். ஆம் உண்மையில் ஓடித்தான் போனேன். மூன்று நாட்களாக வீட்டுக்குள் பூட்டி வைத்த அம்மா கடைக்குப் போகும்வரை பார்த்திருந்து சுகி தண்ணி அள்ளப் போகும் வரை பார்த்திருந்து பின்வளவால் விழுந்து கம்பி வேலி கடந்து வயல் வரம்பால் ஓடி சூட்டுக்களத்தில் வேலை செய்து கொண்டிருந்த சந்திரனின் சைமிக்கிளை வாங்கிக் கொண்டு ஓடிப் போனனேன். எங்க ஓடினன் எண்டதும் எதுக்காக ஓடிப் போனேன் என்பதும் மற்றவர்களுக்கோ , கதைப்பவர்களுக்கும் விசர் வேலையாக இருக்கலாம்.

" என்ன மனேகரி ரீச்சரின்ர மகள் ஓடிற்றாம்."

" அவையள் அந்தப் பெட்டய சைக்கிளில திரிய விடேக்கேயே எனக்குத் தெரியும்."

" இந்தப் பொம்பிளைப் பிள்ளையள் இயக்கத்துக்குப் போய் அந்தப் பெடியளுக்கும் இக்கணம் கரச்சல் குடுக்கத்தான் "

" பொம்பிளப் பிள்ளையள கட்டுப்பாடாய்யெல்லே வளக்க வேணும் இனி அந்தப் பிள்ளைய ஆர் கலியாணம் செய்யப் போகினம் ,?"

" உங்களுக்கு தெரியாதே உங்க இயக்கங்களில எல்லாம் சோசலிசம். கடவுளே இனி அந்தப் பிள்ளை என்னத்துக்கு உதவும் சிவசிவா." என்று பயபக்தியுடன் கூறிக் கொண்டவர் எங்களுடைய அம்மன் கோயில் குருக்கள். ' அவருடைய மகள் நான் சைக்கிளில் ஓடிப் போன இயக்கத்துக்கு மோட்டர் சைக்கிளில் ஏறிவந்து சேர்ந்தது அடுத்த வருடம் நிகழ்ந்ததது.

நடைமுறைக்' கும்' செயல்பாட்டிற்கும் சம்பந்தமே இல்லாத அமைப்பில் இரண்டு வருடங்களை வீணாக்கிவிட்டு அங்கிருந்து ஓடவேண்டி ஏற்பட்டது வீட்டிற்கு.

அம்மா கட்டிப் பிடித்து " வந்திட்டியா " என்றார். பேப்பரிலிருந்து பார்வையை விலக்கின அப்பா " இவள் ஏனாம் அப்பா இஞ்ச வந்தவள் எண்டு கேளப்பா " வரவேற்பு 'நன்றாக' இருந்தது. இதைத்தவிர அவர்களிடமிருந்து வேறு எதிர்பார்க்க முடியாது. ஓடிப்போன என்னுடன் அப்பா கதைத்தது எட்டு வருடங்களுக்குப் பிறகு அதுவும் கலியாணத்தன்று.

வீட்டிலிருந்து அமைப்பு . அதிலிலுந்து வீடு பிறகு வெளிநாடு என்று ஓடிய நான் மிகவும் சோர்ந்துதான் போயிருந்தேன். அம்மாவின் கேள்விகள் என்னுள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தன.

" உனக்கு என்ன குறைவச்சனாங்கள் .......... கேட்டா கேட்டபடி எல்லாம் வாங்கித்தந்துதான் நாங்கள் உன்னைக் கெடுத்துப் போட்டம்."

" உனக்குப் பிறகு ஒரு தங்கச்சி இருக்கெண்டதயாலும் யோசிச்சுப் பாத்தியே "

" எங்கட மானம் மரியாதையெல்லாத்தையும் சந்தி சிரிக்க வைச்சுப் போட்டாய் ஒரு பிள்ளை கைநீட்டிக் கதைக்காதமாதிரி வாழ்ந்த எங்களுக்கு இப்பிடி ஒரு பிள்ளை வந்து பிறந்திருக்கே ஆர் செய்த பாவமோ?" என்ற அம்மாவின் ஏக்கங்கள்.

" நீ வளத்த வளர்ப்பு " இது அப்பாவின் அம்மா மீதான எரிச்சல்.

அம்மாவின்ர ஏக்கங்களிலும் புலம்பல்களிலும் அவவின்ர பக்க நியாயங்கள் இருக்கத்தான் செய்தன. மொத்த சொந்தமும் அவவின்ர மகளைப் பற்றி கதைக்கேக் தாங்கமுடியாத நிலைமை அவவுக்கு. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய செயற்பாடுகள் பிழையானதாகவோ அருவருப்பானதாகவோ இன்றுவரை தெரியவில்லை மாறாக நிறைய அநுபவங்களையும் என்னுள் பல விடயங்கள் பற்றி இருந்த மாயைகள் விலகுவதற்கும் பல நிஜங்களைப் புரிந்து கொள்வதற்கும் வழி செய்தது.

எனக்கு வெளிநாட்டுப் பயணம் சரி வந்ததும் பல வழிகளில் நன்மைகளைச் செய்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அம்மாவும் அப்பாவும் இயக்கத்திற்குப் போய்வந்த தங்கள் மகளுக்கு மிகவும் கஸ்டப்பட்டு ஒரு கலியாணம் செய்து வைத்திருப்பினம். கோவம் வரேக்க வந்தவரும் உன்னை எனக்குத் தெரியாதே அந்த் பொடியங்களோட ரெண்டு வருசம் இருந்தனியெல்லே என்னு சொல்லிக் காட்டிக் கொண்டு இருந்திருப்பார் . நானும் என்ர கோபங்கள சட்டி பானையிலோ பிள்ளையளின்ரை முதுகில நாலு குத்து வைச்சோ குறைச்சிருப்பன் ஏலாக் கடைசியெண்டா அலரிக் கொட்டைய அரைச்சு விழுங்கி இருப்பன். இதையெல்லாத்தையும் விட வெளிநாடு ஒப்பீட்டு ரீதியில பறவாயில்லை.

புதுசா ஒரு சூழலில புதிய மனிதர்களோட பழக கதைக்க இன்னோரு சமூகம் பற்றி அறிய என்று பல நல்ல விடயங்கள். அதோட என்னுடைய கடந்த கால வாழ்க்கை பற்றியும் எனது செயற்பாடுகள் பற்றியும் மறுபரிசீலனை செய்ய என்று பலவிதங்களில உதவியிருக்கு.

என' னுடைய வெளிநாட்டுப்பயணம் எனக்கு நன்மைகளைச் செய்தமாதிரி எனது குடும்பத்தினருக்கும் நன்மைகளைச் செய்துதான் இருக்கிறது.

இப்பவெல்லாம் அம்மா அழுது வடிச்சு சனம் அது கதைக்குது இது கதைக்குது எண்டு கடிதம் எழுதிறதில்லதர்ஷியும் இப்ப அன்புடன் அக்காவுக்கு என்று கடிதம் எழுதுகிறாள். ஒருவகையில நான் பழையபடி இந்த சமூகத்தின்ர அங்கத்தவராகிறன். நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த சமூகத்தின்ர நெறிதவறா அங்கத்தவராக இருக்கிறதில நன்மைகள் இருக்கலாம் என்னுடைய அபிப்பிராயம் என்னென்றால் விட்டுக் கொடுப்புகளும் சுயம் இழந்த தன்மையும் போலி வாழ்வும்தான் எஞ்சும் என்பதுதான்.

பன்னிரண்டு வருட இடைவெளிக்குப்பிறகு திரும்பவும் 95 இல் ஓடிப் போகிறேன். இந்ததடவை ரயிலில் இரண்டு குழந்தைகளுடன். நானும் முரளியும் சேர்ந்து வாழ்ந்த ஆறுவருட பந்தத்தை அறுத்துக் கொண்டு. இந்த முடிவுக்கு நாங்கள் வர இரண்டு வருடங்கள் தேவைப்பட்டது. எடுத்த முடிவை ஒருவருக்குள் ஒருவர் மனம் விட்டுக் கதைக்க ஒருவருடம் எடுத்தது. சம்பந்தமே இல்லாத இரண்டு மனிதர்கள் அந்த வீட்டில் சேர்ந்து வசிப்பது நாளுக்குநாள் கொடுமையாகிக் கொண்டிருந்தது.

எங்களுடைய உறவை, எங்களுடைய திருமணத்தை நாங்களே தீர்மானித்துதான் செய்து கொண்டோம்சாதகமோ பெரியவர்களோ எங்களைச் சேர்த்து வைக்கவில்லை. எங்களுடைய திருமண ஒப்பந்தத்தின் சரி, பிழை. நன்மை தீமை எல்லாவற்றிற்கும் நாமே முழுப் பொறுப்பாளிகள் என்றுதான் தொடங்கினோம். எமது வாழ்கையை.



சேர்ந்து வாழ முன்பு இருந்த முரளிக்கும் எனக்கும் வாழத் தொடங்கிய பின்பு இருந்த எனக்கும் முரளிக்கும் நிறையவே வித்தியாசங்களை நாளாந்த வாழ்க்கையில் அவாதானிக்க கூடியதாக இருந்தது. விடயங்கள் பற்றிய முன்பு இருந்த அபிப்பிராயங்கள் இப்போதெல்லாம் சந்தர்ப்பங்களுக்கும் மனநிலைக்கும் ஏற்றவாறு மாறுபடத் தொடங்கியிருந்தது. வேலை , வீட்டுவேலை, பொதுவேலைகள் என்று ஒன்றுபட்டிருந்த் எனக்கும்

படிப்பகம்

www.padippakam.com



# ள்....!

மையான
றும்"

*மல்லிகா. சோமசுந்தரம்.*

முரளிக்கும் இடையேயான முரண்பாடுகள் மெல்ல மெல்ல வெளியே வரத்தொடங்கியிருந்தன. நிவே பிறந்ததும், அவள் என்னுடைய நேரத்தின் பெரும்பகுதியை எடுத்துக் கொண்டதோ என்னவோ எனக்கு ஒன்றுக்குமே நேரம் போதியதாக



இல்லாமல் போய்விட்டது. இப்ப முந்திமாதிரி நானும் முரளியும் சேர்ந்து எதுவும் செய்வதில்லை. காலையில் நிவேயை டியசஒெயபந (குழந்தைகள் பராமரிப்பு நிலையம்) இல் விட்டுவிட்டு வேலைக்குப் போவதும் பின்னேரம் வரும் போது கூட்டிக் கொண்டுவருவதும் சமைத்து சாப்பிட்டு நீவேயுடனேயே கதை சொல்லிப் படுத்து அவளுடனேயே நித்திரையாகி திடுக்கிட்டு எழும்பி பிண்பு வேலைக்கு எலாம் வைத்தவிட்ட படுப்பது இப்போ நாளாந்தமாகி விட்டது.

ஊர் உலகத்தில் நடப்பது எதுபற்றிய விபரமும் இல்லாமல் முரளியின் நண்பர்களின் கலியாணம், பிறந்தநாள் கொண்டாட்டம் என்று காலம் ஓடி அபி பிறந்தபோது வாழ்க்கை நரகமாகிப் போனது எனக்கு.

எங்களுடைய வாழ்கையின்ர ஆரம்பத்தில எல்லா வேலைகளையும் பகிர்ந்து கொண்ட முரளி இப்போ நான் கேட்கும் உதவிகளை மட்டும் மிகுந்த சிரமத்தின் பேரில் செய்து முடிப்பதையும், வீட்டின் எல்லாப் பொறுப்புகளும் என்னிடமே வந்தும் சேர்ந்து விட்டது. வேலை, விட்டுவேலை, பிள்ளைகளின் பொறுப்பு, சுற்றிவர நடைபெறும் கொண்டாட்டங்கள் எல்லாவற்றிற்கும் தனியே முகம் கொடுத்து நிற்கும் தன்மை எனக்கு நாளுக்கு நாள் குறையத் தொடங்கியது.

முரளிக்கும் எனக்குமான இடைவெளி விட்ட இடத்திலிருந்து கூடிக் கொண்டிருந்தது.

யார் யாரில் என்ன என்ன பிழைகள் கலந்து கதைப்போம் என்று எடுத்த முடிவுகள் எல்லாம் கதைக்கத் தொடங்கி அரைமணி நேரத்தில் யாராவது ஒருவர் குரலை உயர்த்திக் கதைக்க மற்றவர் மௌனம் சாதிக்க முழுமையாக எதையும் கதைக்க முடியாமல் போய் தொடர்ந்து வரும் நாட்கள் நரகமாக நகரும். இந்த நிலைமை எமக்கு ஏன் ஏற்பட்டது எனறும் இதை நாம் எப்படியாவது தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று இருவரும் இயன்றவரை முயற்சிக்கின்றோம் என்பது எமக்குத் தெரிந்துதான் இருந்தது ஆனால் மனங்கள் மட்டும் எதிர் எதிர் திசையில் நின்று விட்டன.

கடைசியாக நான்தான் அதை ஒரு துண்டில் எழுதி முகம் பார்க்கும் கண்ணாடியில் ஒட்டி வைத்தேன்.

" நான் ஒஸ்லோவுக்கு போக யோசிச்சு இருக்கிறன் உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும் "

அன்றிரவு வழமைபோல நிவேயையும் அபியையும் நித்திரையாக்கி விட்டு முரளியக்காக பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒன்பதரையளவில் முரளி வந்து சேர்ந்தார் கையில் எனக்குப் பிடித்த பூக்களுடன்.

" ஹலோ "

" பிள்ளையள் நித்திரையே "

" ம் வேலை எப்பிடிப்போச்சுது

" சும்மா போச்சுது "

" சாப்பிடேல்லையே "

" லேற்றாய் சாப்பிடுவம் "

" ரீ குடிப்பமா ?"

தொடர்ந்து என்ன கதைப்பது என்னு புரியாமல் நான் சமையலறைக்குள் தஞ்சம் புகுந்தேன். முரளி உடுப்பு மாற்றி விட்டு சோபாவில் வந்து இருந்தார். ரீக்கப்புக்களை மேசையில் வைத்து விட்டு பூக்களை வாசிற்குள் வைத்தபடி " முரளி பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு ஒஸ்லோ போகலாம் எண்டு யோசிக்கிறன் "

நீண்ட நேர மௌனம் இருவரையும் சித்திரவதை செய்தது. முரளிதான் கதைக்கத் தொடங்கினார் " எனக்கு சரியான கஷ்டமா இருக்குதம்மா. ஏன் இப்பழி வந்தது எண்டு எனக்குத் தெரியேல்ல. எனக்குத் தெரியுது நாளுக்குநாள் எங்களுக்கு இடையில இடைவெளி கூடிக் கொண்டே போகுதெண்டு ஆனா அத எப்பிடி இர்ல்லாம செய்யிறதெண்டு தெரியேல்ல. ஆனா இந்த கொடுமைய என்னால தாங்க முடியேல்ல சுசி முரளி விம்மிக் கொண்டிருந்தார் எனது மடியில்.

இப்பிடியே கட்டிப் பிடிச்சு ஒப்பாரி வைச்சு அழுது எல்லாத்தையும் கொட்டித் தீர்த்து புதுசா தொடங்க எடுத்த முயற்சிகள் கூட தோல்விகளை சீக்கிரமே தழுவிக் கொண்டடு பலதடவைகள்.

மணி இரண்டரையாகிக் கொண்டிருந்தது. " முரளி உங்களுக்கு விருப்பம் எண்டால் நிவேய உங்களோட விட்டிட்டு போகட்டே ? அபி எண்டா உங்களுன்கு கஷ்டம் நிவே தன்ர வேலைய செய்வா, தன்பாட்டில இருந்து விளையாடுவா "

நீண்ட மௌனத்திற்குப் பிறகு முரளி சொன்னார் " ரெண்டு பேரையும் நீரே கூட்டிக் கொண்டு போம் நான் ஒவ்வொரு கிழமையும் வந்து பாக்கிறன்"

" உங்களிட்ட காசிருக்கே வீட்டு வாடகை கட்ட "

" சம்பளம் வந்திரும் "

" நான் வீட்ட ஒதுக்கி வைச்சிட்டுப் போறன். ஒருமாதத்துக்கு முதல் சொல்லிப் போட்டு வீட்ட விடுங்கோ "

அதுக்குப் பிறகு நானும் முரளியும் கதைத்துக் கொள்ளவில்லை. தொடர்ந்து வந்த நாட்கள் வேதனையைத் சுமந்து வந்தவையாக இருந்தன.

எல்லா சாமான்களையும் முரளியின்ர என்னுடைய பிள்ளையளுடையது என்று பிரித்துக் கட்டி அடுக்கி முடிந்தாயிற்று. நிவேயும் , அபியும் குதுகலமாக இருந்தார்கள் ஒஸ்லோக்குப் போனால் பார்க்குப் போகலாம், சேக்கஸ்க்குப் போகலாம், புதுசு புதுசா விளையாட்டுச் சாமான் வாங்கலாம் என்று சொல்லிக் கொண்டார்கள்.

எனக்கும் பிள்ளைகளுக்கும் மட்டும் ரிக்கற் வாங்கிக் கொண்ட போது நெஞ்சுக்குள் வலித்தது.

முரளிய தனிய விட்டிட்டு போறதும், தனிய இரண்டு குழந்தைகளயும் கூட்டிக் கொண்டு புதிய இடத்தில் வீடு தேடி, பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள ஒருவரைத் தேடி என்று நாளாந்த பிரச்சனைகள் ஏராளம் வரிசையில் வந்தது.

ரெயில்வே ஸ்ரேஷனில் எல்லோரையும் போல நாமும் நின்று கொண்டு இருக்கிறோம். நிவே தன்னுடைய விளையாட்டுச் சாமான்கள் எல்லாம் எடுத்து வைக்கப்பட்டுள்ளதா என்னு அடிக்கடி கேட்டுக் கொள்கிறாள். அபி யக்கற் நாடாவை சப்பிக் கொண்டிலுருந்தான். முரளியை பார்க்கச் சகிக்கவில்லை. எப்பவென்றாலும் வெளியில் வரலாம் என்றபடி கண்கள் நிறைந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. முரளிய இஞ்ச தனிய விட்டுப் போட்டு நாங்கள் ரெயின் ஏற

" என்ன சுசி பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு ஆரோடையோ ஓடிட்டாமே "

" இந்தப் பொம்பிளையளுக்கு அடங்கிறேல்ல் போல முரளி எவ்வளவு அருமையான பெடியன் அவனப் போல புருசன் கிடைக்க குடுத்தெல்லே வைக்க வேணும்"

"இவளவை வந்து நாலு காசு சம்பாதிக்கத் தொடங்கின உடனே இருக்கேலுதில்லப் போல கிடக்கு "

" நான் எண்டா நாலு அறை அறைஞ்சு இரடி எண்டு இருத்தி வைச்சிருப்பன் " என்று நிச்சயமாக கதைக்கப் போகிறார்கள்.

அடுத்தவர் குடும்பத்தில் என்ன என்ன கஷ்டங்கள் நிர்ப்பந்தங்களின், வேதனைகளின் மத்தியில் அவர்கள் பிரிகின்றார்கள் என்பதையோ கொஞ்சம் கூட யோசிக்காமல் எப்பிடி இவர்களால் நக்கலாகவும் நளினமாகவும் கதைக்க முடிகிறது ?

மற்றவர்களின் கதை எனக்கு எட்டவும் அதைப்பற்றிக் கவலைப்படவும் எனக்கு நாள் எடுக்கலாம் ஆனால் முரளிய நிச்சயமாக பலவீனப்படுத்தும். என்னுடைய தற்போதைய ஏக்கம் எல்லாம் இரண்டு பேரும் இந்த பிரிவை உறுதியாக தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் .

ரயில் அரைமணி நேரம் ஓடி இருக்கும் அபி எல்லா சொக்லற்றுகளையும் சாப்பிட்டு முடித்து விடுவதில் கவனமாயிருந்தான். ஆனால் நிவேயோ " அப்பா எப்ப ஒஸ்லோக்கு வருவார்" என்று கேட்கத் தொடங்கி விட்டாள். அபியும் அப்பா அருகில் இல்லை என்பதை உணர அதிக நேரம் எடுக்காது, எப்பிடித்தான் எல்லாத்தையும் தனிய சமாளிக்கப் போறனோ ,.........
சமாளித்தேயாகவேணும் ........!

படிப்பகம்

www.padippakam.com





# பம்பாய் ஒரு காவியமல்ல கலைவிபச்சாரமே

*பி.றயாகரன்*

**பதிலை எதிரெலியிடம் கேட்கவிட்டு பாறைகள் மீது ஒரு ஒப்பாரி. இது காவியம் அல்ல விபச்சாரம். பாசிசபார்பன இந்து வெறிக்கு ஒரு நியாயப்படுத்தல்.**

பம்பாய் சினிமா பற்றிய விமர்சனம் இன்னும் ஓய்ந்து விடவில்லை. பம்பாய் படம் பற்றியும் அதன் குறுக்கு வெட்டுமுகத்தைப் பற்றியும் அதிகளவில் இலங்கை வாசகர்கள் மத்தியில் யமுனா ரயேந்திரன் ஒரு கருத்தை ஏற்படுத்த முனைந்திருக்கிறார். இப்படம் சிறந்தபடம் என பாராட்டியதுடன் இது இந்தியாவின் ஜனநாயகம், சிறுபான்மை ஐக்கியத்தின் ஒரு சின்னமாகவும், மணிரத்தினத்தின் நேர்மையின், மனச்சாட்சியின் பக்கங்கள் எனவும் பாராட்டினார். இதுபோன்று இவர் பல வழிகளில் பம்பாய்படத்தை நியாயப்படுத்தி வருகிறார்.

பம்பாய் படம் அடிப்படையில் மக்களுக்கு எதிரானது. சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு எதிரானது. அந்த வகையில் தமிழ் தேச விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானது. சுயநிர்ணய உரிமைக்கு குழிபறிப்பது.

பம்பாய் படம் மூலம் மனிரத்தினம், இரண்டே இரண்டு மதத்தீவிர வாதிகளே இது போன்ற வன்முறைகளை கூவி அழைக்கின்றனர் என்ற படிமானத்தை இட்டுச் சென்றார். அத்துடன் பம்பாய் கலவரம் முஸ்லீம் மக்கள் தான் நடத்துகின்றனர் என்ற வகையில் படத்தில் முஸ்லீம்களை நெருக்கமாக காட்டி விடுகின்றார்.

பம்பாய் படம் வெளியிடப்பட முன்னமே மதக்கலவரத்தை தூண்டியவர்களுள் ஒருவரான பால்தாக்கரேக்கு போட்டுக் காட்டி அதன் அனுமதியை மணிரத்தினம் பெற்றும் இருந்தார். இதை மனிரத்தினமே ஒத்துக்கொண்டார். அதை ஒட்டி பால் தாக்கரே வழங்கிய பேட்டி படத்தின் மீதான எல்லா விமர்சனத்தையும் தகர்க்கின்றது.

"மணிரத்தினத்தின் பம்பாய் மிகச்சிறந்த படம். நான் படத்தைப் பார்த்தேன். சிலமாற்றங்கள் மட்டும் செய்யச் சொன்னேன், அவ்வளவு தான். பம்பாய் கலவரத்துக்கு நான் வருவது போல் ஒரு காட்சி வருகிறது. அது உண்மையல்ல. நான் எதற்காகவும் வருந்தவில்லை. கலவரத்தை சிவசேனை ஆரம்பிக்கவில்லை. நாங்கள் பதிலடிதான் கொடுத்தோம். (மற்றபடி) இது மணிரத்தினம் உருவாக்கியுள்ள அற்புதமான படம். படத்தை நான் வெகுவாக ரசித்தேன்."

—டைம்ஸ் ஆ:பி இந்தியா—
மார்ச் 31

இந்தவகையில் கலவரத்தைத் தொடங்கிய பால்தாக்கரே சிறந்த படம் என பாராட்ட முன்வரும் போது படம் பார்பன அடிப்படையை பாதுகாப்பது புரிகிறது.

பார்ப்பன இந்து வெறி கொண்ட கதாநாயகன் அப்பாவின் எதிர்ப்பையும் மீறி நடந்த திருமணம் அதன் பின் ஒற்றுமையாகும் குடும்பமும், பம்பாய் கலவரம் குறுக்கிட்டு அனுமதி கொடுக்கிறது. தீபற்றி வீட்டில் பெற்றோர் கருகிச்சாக, பிள்ளைகள் தொலைந்து போக, பின் தேடி கண்பிடிக்க, மனிதச் சங்கிலிப் போராட்டத்தை தொடங்கி படம் முடிந்து விடுகின்றது.

பம்பாய் கலவரத்தை குறுக்கு வெட்டுமுகமாகக் காட்ட எத்தனையோ உண்மைச்சம்பவங்கள் இருக்க காதலும், பெண்களின் பாலியல் உறுப்புக்களுமே தேவைப்பட்டுள்ளது மணிரத்தினத்திற்கு.

இது வெறும் நடுத்தர வர்க்க இயலாமையை, அதன் சாதகத் தன்மையை மணிரத்தினம் நியாயப்படுத்த, பாதுகாக்க செய்யப்பட்ட மாபெரும் மோசடி. இதன் மூலம் இந்திய பாசிச பார்ப்பன ஆதிக்கத்தை, ஆட்சியை பாதுகாக்க முயல்வதாகும். சிறுபான்மை இன, மத, சாதி அடிப்படையிலான பிரிவுகளை அடக்கி ஒடுக்க முயல்வதாகும். இதை மணிரத்தினத்தின் பேட்டி, படம் வெளிப்படுத்துகிறது.

"எவனோ அடித்துக்கொள்ள ஏன் சாகவேண்டும்?" என மணிரத்தினம் புலம்புகிறார். நீங்கள் பார்பர் மசூதியை இடியுங்கள், முஸ்லீம்களைக் கொல்லுங்கள் நாங்கள் ஆதரவு தருகிறோம் என இந்துவெறியர்களுக்கு ஆதரவு தருகிறார்.

ஒரு சினிமாவின் உள்ளடக்கம் முக்கியமானது என்பதை மணிரத்தினம் சிறப்பாகப் புரிந்துள்ளார். முஸ்லீங்கள் மீது சேறடிக்க காதல் மிக அவசியமான உள்ளடக்கமாகிறது. உயர்ந்த காதல், அதன் உணர்ச்சிகள், அவர்களின் அழகுகள், குலுங்கி எழும் மார்பகம் என்பன படத்தின் அடிப்படையை திசைதிருப்பப் போதுமான உள்ளடக்கமாகும். பெண்களின் உடல் உறுப்புக்களை வைத்து திரைப்படக் கருவை திசை திருப்பி ஆண் ரசிகர்களுக்கு எச்சில் வடிய வைத்து விபச்சாரம் பண்ணியுள்ளார் மணிரத்தினம். பாலியல் உறுப்புகளைக் காண ரசிகன் மீண்டும் வருவான் தன் கஜனாவில் பணம் நிறையும் என அவருக்கு நன்கு தெரியும்.

கதாநாயகி ஒரு முஸ்லீம் பெண்ணாக வரும் இடத்தில் இந்துவான கதாநாயகன் முஸ்லீமாக மாறிமிருப்பின் படம் எடுத்த எடுப்பில் தடைசெய்திருப்பர். ஏன் எனின் ஆணாதிக்க சமூகம், பார்பன இந்து மதவெறி ஆதிக்கத்தை எதிர் மறையாயை அங்கீகரித்திருக்காது. இதைப் பேணுவதன் மூலம் தன்னை முஸ்லீம் எதிர்பாளனாக பிரகடனம் செய்கிறார் மணிரத்தினம்.

அயோத்தி கோவில் கட்ட நிதி உதவி கோரிவரும் போது கதாநாயகி அதிர்ந்து நிற்க, கதாநாயகனை கூட்டிச் சென்று பணம் கொடுத்தானா? யார் அறிவார். அவ்விடத்தில் மௌனம். இதுதான் மணிரத்தினத்தின் விமர்சன நோக்கு.

பாபர் மசூதி இடிக்க ரதயாத்திரை செல்லும் பார்ப்பன பாசிச இந்து மதவெறிக் குண்டர்களை எதிர் கொள்ளும் முஸ்லீம் கதாநாயகியை அக்குண்டர்கள் மனிதாபிமானமாக விடுவிக்க செய்கின்றனராம். ஆனால் ரதயாத்திரை ரதத்தில் எத்தனையோ தலைகள் (முஸ்லீங்கள்) உருண்டது என்பது உண்மையாகும்.

இவ்விரு சம்பவத்திலும் கதாநாயகி தனது கணவனிடம் இது ஏன் எனக் கேட்கவில்லை. இது தான் பார்பனன் மணிரத்தினத்தின் நரிக்குணம். மதாநாயகி தனது கருத்தைச் செல்ல மறுக்கும் இன்னிலையில் மணிரத்தினம் மசூதி இடிப்பை ஆதரிக்கிறார். இது போன்று நடுவீதியில் நின்று கதாநாயகன் உபதேசம் செய்யும் போது படம் ஊமையாகிவிடுகிறது. இது ஏன்? இதுதான் மணிரத்தினத்தின் நேர்மையா?

கலவரம் தொடர்கிறது. ஏன் இந்தக் கலவரம் என யாரும் கேட்கவில்லை, இது ஏன்? இப்படியெல்லாம் கேள்விகேட்டால் பம்பாய் என்ற இக்காவியம் சிதைந்து விடுமோ? பார்பன இந்து வெறித்தனம் கேள்விக்கு உள்ளாகிவிடுமோ?

பதிலை எதிரெலியிடம் கேட்கவிட்டு பாறைகள் மீது ஒரு ஒப்பாரி. இது காவியம் அல்ல விபச்சாரம். பாசிசபார்பன இந்து வெறிக்கு ஒரு நியாயப்படுத்தல்.

"இயா அல்லா" என பெரும் கூச்சலுடன் திரையில் கலவரம் தொடங்கிய உடன் முஸ்லீம்கள் பொலீசைத் தாக்குகின்றனர், தீவைக்கின்றனர். இதுதான் படத்தின் கலவரக் காட்சியின் தொடக்கம்.

படத்தின் தொடக்கம், தொடர்ச்சியாக முஸ்லீம் தாக்கலை மீளமீளக் காட்டுவதும், அதிக அளவு காட்டுவதும், மிக நெருக்கமான குளோசப்பில் காட்டுவதும். இதன் மூலம் கலவரத்தை முஸ்லீங்கள் நடத்தியதாகச் சித்தரிக்கின்றது.

உண்மையில் கலவரம் தொடங்கிய தென்பது இரண்டு தொழிலாழர்கள் தொழிற்சங்கத் தகராறில் கொல்லப்பட்டனர். 6ம் திகதி "சாம்னா" பத்திரிகையில் தலையங்கமாக, அவர்கள் முஸ்லீம்கள் தான் கொன்றனர் என எழுதி, கலவரத்தை தொடங்கினார் பால்தக்கரே. ஆனால் இதை மணிரத்தினம் என்ற நரியன் இரண்டு மதக் கும்பல் மோதுவதாக ஏன் திரித்தான். இதை விளங்கிக் கொள்ள படத்தில் ஒரு காட்சியே போதும். கதாநாயகன் கதாநாயகியை நோக்கி மதம் மாறி வரும்படி கோருவதன் மூலம் மணிரத்தினம் பார்பன இந்து உருபெற்ற ஒருவன் எனப்புரியும். இப்படி வரிக்கு வரி எழுதும் விடையத்தை படம் முழுதாகக் கொண்டுள்ளது.

அடுத்துமணிரத்தினத்தை நியாயப்படுத்த சிலர் முனைகின்றனர். இந்தவகையில் யமுனா ராயேந்திரன் ஈழமுரசிலும், வேறு சில பத்திரிகைகளிலும் கலைஞ்ஞன் என்பவன் யார் என முத்திரை குத்த முனைகின்றார். இது இன்று தம்முகத்தை மூடி கலைஞ்ஞன் பற்றி பொதுவாக நியாயப்படுத்தும் வாதங்களே.

யமுனா ராயேந்திரன
கூறுகின்றார் கலைஞ்ஞன் தீர்
வைக்கத் தேவையில்லை
என்கின்றார். அது அரசிய
வாதியின் வேலை என்கின்றா
இதன் மூலம் மணிரத்தினத்தி
பார்ப்பன இந்து வெறி சமூகத்தை
பாதுகாக்க முனைகின்றார். இத
மூலம் தான் எதன் பிரதி நி
என்பதைபறை சாற்றுகின்றார்.

தீர்வு வைக்கத் தேவையில்லை
என்ற வாதம் ஒரு மோசடியாகு
இதைச் சொல்ல முனைபவர்கள் ஒ
உண்மையை மறைக்கின்றனர். இத
மூலம் மணிரத்தினத்தின் பாசிச
பார்பன இந்து வெறி அம்பலமாகாம
இதை அரசியல் வாதியின் வேலை
என்றும் புரட்டிவிடுகின்றார். ஆனா
மணிரத்தினம் அதை ஏற்காத
மட்டும் இன்றி தனது சமூ
அடிப்படையில் தீர்வு வைத்துள்ளா
ஆனால் இன்று விமர்சனம் எழுது
பத்திரிகைகள் மணிரத்தினத்திற்
திருத்திக் கொடுத்தும், தம
சமூகத்திற் கேற்ப படத்தை தி
படுத்தியும், புகழ் பாடியும் உள்ளன
இது தேவை தான? முதலில் படத்தி
உண்மையையும், நடந்த நட
சம்பவத்தையும் ஒப்பிட்டு விமர்சி
வேண்டும். யதார்த்தத்தை யதார்த்தம
வெளியில் கூறவும், விமர்சிக்க
வேண்டும்.

அடுத்து அரசியல் வா
கலைஞ்ஞன், தொழிலாளி என்ற வே
பாடு நீடிக்கும் வரை ஒரு சோச
சமூகம் கூட நீடிக்க முடியா
இவர்களுக்குள் உள்ள இடைவெ
இல்லாது போகும் போது த
சமூகம் ஒரு சோசலிச சமூகத்
கட்டி எழுப்ப முடியும். இது சோவி
சீனாவில் நடந்தவைகளுக்கு ஒ
படிப்பினையாகும். ஒரு மனித
அரசியல்வாதி, கலைஞ்ஞ
தொழிலாளி என எல்லவிதமாக
இருக்க வேண்டும். இதை மறுப்ப
இருக்கும் இன்றைய பிற்போக்க ச
நிலைப்பாட்டை பேணுவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# மக்களை ஏமாற்ற "புதியதோர்"

•••••••• 1 பக் தொடர்

ந்திரிக்காவின் தற்போதைய ரேரணையானது ஒன்றும் இல்லாத வறும் காகிதக் கிறுக்கலே.

பிராத்திய சபையைக் காண்டதாக இலங்கை ஆட்சி றையை மாற்றி, அதிகாரப் வலாக்கம் செய்வதே மேற்படி ரேரணையின் சாராம்சமாகும். தனடிப்படையில் தற்போது லங்கையில் உள்ள ஒவ்வெரு காணமும், ஒவ்வெரு பிராந்திய பைகளைக் மாற்றப்படும். இதில் டக்குக் கிழக்கு மாகாணங்கள் ன்றாக இணைக்கப்பட்டு ஒரு ாந்திய சபையாக்கப்படும். (அதாவது மாகாணங்கள் 8 பிராந்திய பைகளாக்கப்படும்) இப்பிராந்திய பைகளுக்கு ஒவ்வெரு ஆளுனர் மிக்கப்படுவர். தேர்தல் மூலம் ாந்திய சபை முதலமைச்சர்களும் வரின் கீழ் மந்திரிசபையும் ருவாக்கப்படும். இப்பிராந்திய பையானது சில, பல நிறைவேற்று திகாரங்களைக் கொண்டிருக்கும். மலதிக விபரம்:- சந்திரிக்கா அரசால் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வுத் திட்டம் என்ற தலைப்பைப் பார்க்கவும்)

மேற்கூறிய பிராந்திய சபையைப் பொறுத்தளவில் வடகிழக்குப் பிராந்தியம் உள்ளடங்கிய அனைத்துப் பிராந்தியங்களும் ஒரே முறையின் ஒரே உரிமையைப் பெற்றிருக்கும். இலங்கையைப் பொறுத்தளவில் (மத்திய அரசு) இலங்கையின் அரசாதிக்கம் தொடர்ந்தும் சிங்கள தேசிய இன ஆதிக்கவாதிகளின் கையிலேயே இருந்து வரும். இந்தநிலையில் பிராந்திய சபை உருவாக்கப்படின், மத்திய அரசில் ஆட்சிக்கு வரும் கட்சி எந்த நேரத்திலும் தன் பெரும்பான்மையைப் பயன்படுத்தி சிறுபான்மை இனங்கள் வாழும் பிராந்தியங்களின் "உரிமைகளை" பறிக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம். நிதி ஒதுக்கீடு, பாதுகாப்பு, மற்றும் முக்கியமான அதிகாரங்கள் மத்திய அரசின் கையில் உள்ளதால் இது இலகுவாக செய்யக்கூடியதாகும்.

மேலும் இப்பிரேரணையின்படி வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு பிராந்திய சபையாக்கப்படும். இப்பிராந்திய சபை அமைக்கப்படும் போது சிங்கள, தமிழ், முஸ்லீங்களின் குடியிருப்புகள் பற்றி ஆராயப்படும். அதாவது கடந்த காலங்களிலும் தற்போதும் திட்டமிட்ட முறையில் எல்லைப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்களக் குடிகள் அப்புறப்படுத்துப்பட மாட்டாது. இக்குடியேற்றங்களுக்கு ஏற்பவே பிராந்திய எல்லைகள் வகுக்கப்படும். இதனடிப்படையில் எல்லைக் கிராமங்களில் இருந்து அடித்து விரட்டப்பட்ட தமிழ், முஸ்லீங்களின் நிலை கேள்விக்குரியதே. இவ்வாறு பல ஓட்டைகளையும் அரைகுறை தீர்வுகளையும் கொண்டதே இப்பிரேரணை.

### பிரேரணையும், அடிவருடிகளும்

இப்பிரேரணை அரசால் முன்வைக்கப்பட்டவுடனேயே, தமிழ் மக்களின் இரத்தத்தினாலும், எலும்புக்கூட்டினாலும் தமது அதிகார ஆசனங்களை அமைக்க விரும்பும் சந்திரிக்காவின் அடிவருடிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லீம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, .................. போன்ற கட்சிகள் சந்திரிக்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். மேற்படி பிரேரணையை நடைமுறைப்படுத்த ஆலோசனை வழங்கும் சபை அமைப்பது பற்றி கலந்துரையாட வந்த தமிழ் புல்லுரிவிகள் அக்கலந்துரையாடலிலும் தமக்குள் யார் சந்திரிக்காவின் உண்மையான அடிவருடிகள் என நிருபிக்க முயன்றனராம்.

முன்பு இந்தியாவுடன் குடும்பம்நடத்த வெளிக்கிட்டு ஒரு இயக்கமே (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கந்தறுந்தகதை மேற்படிக் கட்சிகளுக்கு ஞாபகத்தில் இல்லை என்பது ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல. இந்திய ஒப்பந்தத்திற்கு உடன்பட்ட யூ.என்.பி பிற்காலத்தில் புலிகளுடன் சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வையும் இந்திய இராணுவத்தையும் அடித்து விரட்டியது மக்களுக்கு நன்றாக ஞாபகத்தில் தொடர்ந்தும் உள்ளது.

### புலிகளும் பிரேரணையும்

புலிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைத்துள்ளனர். யுத்தத்தை தீர்வுக்குக் கொண்டுவராமல் தொடர்ந்தும் யுத்தம் புரிந்தவண்ணம் இனப்பிரச்சனைக்கான தீர்வை முன்வைப்பதை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்துள்ளனர். புலிகள் தாம் இல்லாது வகுக்கப்பட்ட பிரேரணையை ஏதாவது காரணம் காட்டி ஏற்க மறுப்பார்கள் என்பது எல்லோருக்கும் எதிர்பார்த்த விடையமே.

ஆனால் நாம் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியது போல் சந்திரிக்கா பிரேரணையை முன்வைப்பதன் மூலம் சர்வதேசத்தையும், சிங்கள மக்களையும் தம்பக்கம் ஈர்த்துள்ளார். மறுதலையாக புலிகளையும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் "பயங்கரவாதம்" என மறைமுகமாக வரையறுத்துள்ளனர்.

இதை அம்பலப்படுத் வேண்டுமெனில் புலிகள் தம்பங்கிற்கு இனப்பிரச்சனைக்கான தீர்வை (தமிழீழம் தவிர்ந்த) முன்வைக்க வேண்டும். அப்போது தெரியும் சந்திரிக்காவின் நயவஞ்சகம் என்னவென்று.

---

# அரசால் முன்வைக்கப்பட்ட திட்டம்

1 பக்கத் தொடர்

(உ) நாணயத்தன்மை, ளிவுபாடு அத்துடன் ள் முகவரியாக நமுகப்படுத்தப்பட்ட மற்றும் ர்றித்த பெறுமதி முறைமை ர்பவற்றை அடிப்படையாகக் ாண்டதும், வினைத்திறமையான மூலாக்கத்தை இயலச் ய்யக்கூடியதும், மத்திய பிராந்திய னக்குகளை நீதியாக தீர்த்து பப்பதற்கான கட்டமைப்புக்களை ள்ளடக்குவதுமான ந்தியங்களுக்கு அதிகாரங்களை வலாக்குவதற்கான னைத்திறன்மிக்க அரசியல் மைப்புக் கட்டுக் கோப்பொன்றினை படுத்தச் செய்தல்.

(ஊ) தேசிய அல்லது மாகாண லது ஊர்மட்டம் ஏதாவது ந்தாலும் தேசிய வாழ் சகல கங்களும் முழுமையாகப் குபற்றி அதன் மூலம் ந்தியங்களும் அவற்றில் வாழும் தாயத்தினரும் நிலையான பல் ாழி பேசும் ஜனநாயக றைமையென்றின் ஆக்கபூர்வ காளிகளாக விளங்குவதை திப்படுத்தல்.

1 அதிகாரப் லாக்கல் அமைப்பு முறை

1.1 பரவலாக்கல் கூறு

அரசியலமைப்புக்கான பதோர் அட்டவனை மூலம் ங்காணப்படும் ஒவ்வெரு ானத்திற்கும் ஒரு பிராந்திய சபை க்கப்படும். பிராந்தியங்களுள் ஒன்று போதுள்ள வடக்குக் கிழக்கு ாணத்தின் ஏற்கனவேயுள்ள எல்லைகளை, மீள எல்லை குறிப்பதன் மூலம் அமைக்கப்படும் போது சிங்களவர், தமிழர், முஸ்லீம்களின் அக்கறைகள் பற்றி இனப்காணும் நோக்குடனும் முழுமையான .கலந்தாராய்வு இடம் பெறும்.

1.2 பிராந்திய சபைகள்

ஒரு பிராந்திய சபையானது சட்டத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான ஒறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பிராந்திய சபை முன்னதாகவே கலைக்கப்பட்டாலோழிய ஐந்தாண்டு காலப்பகுதிக்குத் தொடர்ந்திருக்கும். ஒவ்வெரு சபைக்கும் சபாநாயகர் ஒருவரும், பிரதிச் சபாநாயகர் ஒருவரும் இருப்பார்.

(அ) பிராந்தியத்தின் சட்டவாக்கற் தத்துவம் பிராந்திய சபைக்கு உரித்தாக்கப்பட்டதாக இருக்கும். பிராந்திய நிரலில் தரப்பட்ட ஏதேனும் விடையம் தொடர்பில் ஒவ்வேரு பிராந்தியமும் அப்பிராந்தியத்திற்கு ஏற்புடையதான சட்டங்களை ஆக்கலாம். பிராந்திய சபை ஒதுக்கிய நிரலின் மீது எவ்வித நியாயாதிக்கத்தையும் கொண்டிருக்க மாட்டாது.

1.3 ஆளுநர்

பிராந்திய சபையென்று எந்தப் பிராந்தியத்துக்கு என ஸ்தாபிக்கப்பட்டதோ, அந்தப்பிராந்தியம் ஒவ்வெனன்றுக்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் பிராந்தியத்திற்கான பிரதான அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.

1.3.1 (அ) பதவியிலிருந்து விலகியதன் மீது (ஆ) பிராந்திய சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மீது (இ) ஜனாதிபதியால் அகற்றப்படுவதன் மீது. தமது பதவியைத் துறந்தவராவார்.

1.3.2 ஆளுநர் முதலமைச்சரின் ஆலேசனை மீது பிராந்திய சபையைக் கூட்டலாம், கலைக்கலாம் அத்துடன் ஒத்தி வைக்கலாம்.

1.4 முதலமைச்சரும் அமைச்சரவையும்

ஆளுநர் பிராந்திய சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற ஆளை பிராந்திய நிருவாகத்தை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளுவார்.

1.4.1 முதலமைச்சர் பிராந்திய சபையின் நம்பிக்கையை அனுபவிக்கும் காலம் வரைக்கும் பதவியிலிருந்து அகற்றப்பட முடியாது.

1.4.2 பிராந்தியத்தில் உள்ள நிறைவேற்றுத் தத்துவம், முதலமைச்சரின் ஆலோசனையின் மீது ஆளுநரால் நியமிக்கப்படும் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கும். அமைச்சரவையினரும் முதலமைச்சரும் பிராந்திய சபைக்கு கூட்டாகப் பெறுப்புடையவர்களாக இருப்பர்.

1.5 தலைநகர ஆள்புலம்

கொழும்பு மற்றும் சிறீஜயவர்த்தனபுர கோட்டை ஆகிய நகரங்களைக் கொண்டுள்ள ஆள்புலம் மேற்குப் பிராந்தியத்திற்கென அமைக்கப்படும் பிராந்திய சபையின் நியாயாதிக்கத்திலிருந்து விலக்கி விடப்பட்டதாக இருக்கும் இவை மத்திய அரசு பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையில் மத்திய அரசினால் நேரடியாக நிருவகிக்கப்படும்.

2 நிதி

2.1 தேசிய நிதி ஆணைக்குழுவென்று அமைக்கப்படும். இது சமப்படுத்திய பிராந்திய அபிவிருத்தியை எய்து குறிக்கோளை மனதிற் கொண்டு பிராந்தியத்திற்கு மானியங்களைக் குறித்து ஒதுக்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

2.2 குறித்த சில குறித்துரைக்கப்பட்ட துறைகளில் பிராந்திய சபைகள் வரிமிறுப்பனவு செய்யும் தத்துவ முடையனவாக இருக்கும் அரசியலமைப்பு ஏனைய அரசிறை பங்கிடும் ஒழுங்குகளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

2.3 பிராந்திய சபைகள் கடன் எடுப்பதற்கும் தமது செந்த நிதி நிறுறுவனங்களை தாபிப்பதற்கும் தத்துவமுடையனவாக இருக்கும். விதித்துரைக்கப்பட்ட எல்லைக்கும் கூடுதலாக சர்வதேச ரீதாக கடன்பெறுவதற்கு மத்திய அரசின் ஒருமைப்பாடு தேவை.

2.4 பிராந்திய சபைகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் சர்வதேச மானியங்கள் மற்றும் அபிவிருத்தி உதவியையும் மத்திய அரசினால் குறித்துக் கூறப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக்கள்ளலாம்.

3 சட்டமும் ஒழுங்கும்

3.1 பிராந்தியத்தின் ஆளுநரின் ஆலோசனையுடன் முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட பிராந்தியப் பொலீஸ் ஆணையதளரின் தலைமையில் பிராந்தியப் பொலீஸ் சேவையென்று இருக்கம். பிராந்தியப் பொலீஸ் ஆணையாளர் இயைபான முதலமைச்சருக்க பொறுப்புடையவராக இருப்பார் என்பதுடன் அவரின் கட்டுப்பாட்டில் பணியாற்றுவார். பிராந்திய பொலீஸ் சேவை ஆட்களுக்கும் ஆதனத்திற்கும் எதிரான சகல தவறுகளையும் புலனாய்வு செய்யும்.

3.2 அரசுக் கொதிரான தவறுகள், தேசியப்பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள், தேர்தல் தொடர்பான தவறுகள், மாகாணங்களுக்கிடையிலான முற்றங்கள் மற்றும் சர்வதேசக் குற்றங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்குப் பொறுப்புடையதாக தேசியப் பொலீஸ் சேவையென்று இருக்கும். தேசியப் பொலீஸுக்கு தேசிய பொலீஸ் ஆணையாளர் தலைவராக இருப்பார். அவர் மத்திய அரசிற்குப் பொறுப்புடையவராக இருப்பார்.

3.3 பிராந்திய பெலீஸ் சேவை உறுப்பினர்களைச் சேர்த்தல் பிராந்தியத்துக்குள்ளாக இடம் மாற்றுதல், வேலையில் இருந்து நீக்குதல் மற்றும் அவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன பிராந்திய பொலீஸ் அணைக்கழுவின் பொறுப்பாக இருக்கும்.

3.4 தேசிய பொலீஸ் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். பிராந்திய பொலீஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் பொலீஸ் அலுவலர்களை ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றோரு பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்வதும் அதன் பணிகளுள் அடங்கும்.

3.5 தேசிய பொலீஸ் ஆணைக்குளுவும் பிராந்திய பொலீஸ் அணைக்குழுவும் அரசியல் அமைப்புப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். பிராந்தியப் பொலீஸ் ஆணைக்குழுவின் நியமனத்தில் அரசியலமைப்புப் பேரவையானது சம்மந்தப்பட்ட பிரதிநிதிகளுக்கான

8 பக்கம் பாற்க ☞

படிப்பகம்

www.padippakam.com



**AVSENDER / FROM:**

Sumaihal
postboks: 415
9001 TROMSØ
NORWAY

# BLAD

**MOTTAKER / TO:**

## எம்மை நாட்டைவிட்டு பாசிசம் விரட்டுகிறது ஐரோப்பாவில் நாசிசம் எம் உயிரை அச்சுறுத்துகிறது........! எம்தேசத்தில் நாம்விட்ட தவறை மறுபடியும் நாம் விடாதிருக்க ............

## நாசிச, பாசிச, இன, மத, தேசிய வெறிக்கெதிராக அணிதிரள்வோம்.

## SOS RASISME இல் இணைந்து கொள்வோம்.

STOPP NAZISTENE




SOS Rasisme

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **Haugesund / Karmøy - AU, Boks 297, 5501 HAUGESUND, Oslo - AU, Boks 4720, 0506 OSLO, Tromsø - AU, Boks 685, 9001 TROMSØ, Bergen, Boks 1033, 5501 BERGEN, Stavanger, Boks 737, 4001 STAVANGER**

7 பக்கத் தொடர்

முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றும்.

4. காணியும் காணிக் குடியேற்றமும்

4.1 காணி பரவலாக்கப்பட்ட விடையமாகும் ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரச காணி பிராந்திய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டனவான இருக்கம். ஒதுக்கிய விடையமென்று தொடர்பாக மத்திய அரசின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஒரு பிராந்தியத்துக்குள்ளாக இருக்கும் அரச காணி சட்டத்தினால் தாபிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைகளுக்கிணங்க இயைபான பிராந்திய சபையின் ஆலோசனையுடன் மத்திய அரசினால் பயன்படுத்தப்படலாம்.

4.2 எதிர்கால காணிக் குடியேற்றத் திட்டங்களில் முதலில் மாவட்டத்தில் உள்ள ஆட்சிகளும் பின்னர் பிராரந்தியத்தில் உள்ள ஆட்சிகளும் முன்னுரிமை அழிக்கப்படும்.

5. கல்வி

5.1 கல்வியும், உயர்கல்வியும் பிராந்திய நிரலில் உள்ளடக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட விடையங்களாக இருக்கும்.

5.2 குறித்த சில குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகளும், பல்கலைக் கழகங்களும் மத்திய அரசால் நிருவகிக்கப்படும் தேசிய நிறுவனங்களாக வெளிப்படுத்தப்படும்.

5.3 தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன பிராந்திய சபையின் பொறுப்பாக இருக்கும்.

5.4 ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்காக அல்லது பிராந்திய பாடசாலைகளுக்காக ஆட்சேர்க்கப்பட உள்ளார்கள் என்பதைப் பொறுத்து ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதானது மத்திய அரசினதும் பிராந்திய அரசினதும் போறுப்பாக இருக்கும்.

5.5 பிராந்திய பாடசாலைகளில் உள்ள பதடவிதனா அபிவிருத்தி, பிராந்திய சபைகள் பொறுப்பாக இருக்கும். ஆகக்குறைந்த தராதரங்கள் மத்திய அரசால் விதிக்கப்படும்.

5.6 மத்திய அரசினதும், பிராந்தியங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்டதேசியக் கல்வி ஆணைக்குழுவொன்று பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டதாக இருக்கும்.

(அ) பிராந்திய முதலமைச்சரின் கலந்தாலோசனையுடன் தேசியப் பாடசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் கண்டறிதலும் அத்தகைய தேசியப் பாடசாலைக்ளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதி பெறுவதற்கான தகமைகளை விதித்துரைத்தலும். (ஆ) ஆசிரியர்களின் பயிற்சி, பரீட்சை, பாடவிதானம் மற்றும் தொழிலுக்கமர்த்தல் தொடர்பிலான ஆகக் குறைந்த தராதரங்கள் வகுத்தல்.

6. நீதித்துறை நிர்வாகம்

6.1 ஒவ்வெரு பிராந்தியத்திலும் ஒர மேல் நீதிமன்றம் இருத்தல் வெண்டும். மேல் நீதிமன்றமானது பிராந்தியத்திற் குள்ளான குற்றவியல், மேன் முறையீடு மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்.

6.2 பிராந்திய முதலமைச்சரின் கலநஇதாலோசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும் பிராந்திய நீதி சேவை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதியையும் முதுமுறை விசையில் அடுத்துவரும் இரு மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்டதாக இருக்கும்.

6.3 பிராந்திய நீதிசேவை ஆணைக்குழு பிராந்தியத்துக்குள்ளாக பிராந்திய மேல்நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிப்பதற்கு பொறுப்புடையதாக இருக்கும்.பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழு நீதிபதிகளை இடம் மாற்றுதல் தொடர்பாக தேசிய நீதிச்சேவை ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்கம்.

6.4 ஆளுநர் பிராந்திய சட்டத்துறை அதிபதி ஒருவரை நியமிப்பார். இவர் பிராந்திய சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணாகாத தன்மைபற்றி ஆளுநருக்கு ஆலோசனை அளிப்பார். சட்டமேன்று அரசியலமைப்பிற்கு முரணானதாகக் காணப்பட்டால் பிராந்திய சட்டத்துறை தலைமை அதிபதி ஆளுநருடனான ஆலேசனையின் பின்னர் உயர்நீதிமன்றத்தின் அல்லது மத்திய அரசுக்கும் பிராந்தியத்திற்கும் இடையே பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கென சிறப்பாக நிறுவப்பட்ட வேறு ஏதேனும் நியாய சபையின் முன்னர் வழக்குத் தொடர்வார்.

7. பகிரங்க சேவை

7.1 பிராந்திய சபைகளினால் தொழிலுக்கமர்த்தப்படும் அல்லது மாற்று சேவைக்கு அழைக்கப்படும் எல்லா ஆட்களினதும் ஆட்சேர்ப்பு, ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் அவர்களை பதவியில்'ருந்து நீக்குதல் என்பவற்றிற்குப் பொறுப்பாக இருப்பதற்கென (இயைபான முதலமைச்சரின் ஆலேசனையுடன் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படும்) பிராந்திய பமிரங்க சேவை ஆணைக்குழு ஒன்றிருக்கும்.

7.2 பிராந்தியத்தின் வெளியே பிராந்திய பகிரங்க சேவை ஆணைக்குழு அத்தகைய எல்லா ஆட்சிக்ளினதும் அடமாற்றத்தை செய்யும் போது (அரசியலமைபஇபுப் பெரவையினால் நியமிக்கப்பட்ட) தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவைக் கலந்தலேசிக்கம்.

8. அதிகாரப் பரவலாக்கல் ஆணைகுழு

மத்திய அரசிற்கும் பிராந்தியத்திற்கும் இடையே ஏற்படும் பிணக்குகளை அல்லது பிராந்தியங்களுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கென அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் மீதான நிரந்தர அணைக்குழு வென்று இருத்தல் வேண்டும். ஆணைக்குழு மத்தியஸ்தம் மற்றும் நீதித் தீர்பளித்தல் தொடர்பான தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

9. அதிகாரப் பரவலாக்கலின் கட்டமைப்பு

9.1 (அ) ஐக்கிய இறைமை கொண்ட இலங்கைக் குடியரசை பிராந்தியங்களின் ஒன்றியமாக இருப்பதாகும். (ஆ) குடியரசின் ஆள்புலம் முதலாவது அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிராந்தியங்களையும் அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் கொண்டிருப்பாற்கும் (இ) மக்களின் சட்டமாக்கல் தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பாரளாமன்றத்திலும் பிராந்திய சபைகளிலும் மக்கள் தீர்பொன்றில் மக்களினாலும் பிரகோகிக்கப் படுவதற்கும் (ஈ) மக்களின் நிறைவேற்இறுத் தத்துவம் இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு பிரதம மந்திரியினதும் அலோசனையின் மீது செயலாற்றும் குடியரசின் ஜனாதிபதியினாலும் அந்தந்த முதல் அமைச்சர்களினதும் பிராந்திய அமைச்சரவைகளினதும் ஆலோசனை மீது செயலாற்றும் ஆளுநர்களிநாலும் பிரயோகிக்கப்படுவதற்கும் அரசியலமைப்ப ஏற்பாடு செய்யும்.

9.2 தற்போதுள்ள அரசியலமைப்பின் உறுப்புரை 76 நீக்கப்படும்

10 பரவலாக்கலின் பொருள்

பிராந்திய சபைகள், அவற்றுக்கென பரவலாக்கம் செய்யப்பட்ட ஆட்சி எல்லையிலுள்ள புறநீங்கலாக சட்டவாக்கத் தத்துவத்தையும், நிறைவேற்றுத் தத்துவத்தையும் பிரயோகிக்கும் விடையங்களும், பணிகளும் மத்திய அரசிற்கும், பிராந்தியங்களுக்கும் இடையில் பின்னிணைப்பில் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

பின்னிணைப்பு

நிரல்கள்

(அ) பிராந்திய நிரல்

(1) சுகாதாரமும், சுதேச வைத்தியமும். (2) தேசியப் பாடசாலைகள், தேசியப் பல்கலைக்கழகங்கள் அத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கும், பரீட்சைக்கும், பாடவிதானத் திற்கும், தகமைகளுக்குமான ஆகக் குறைந்த தராதரங்களை அமைத்தல் ஆகியன நீங்கலாக கல்வியும், கல்விச் சேவைகளும். (3) கமத்தொழிலும், கமநல சேவைகளும். (4) பிராந்தியத்தினுள் நீர்பாசனம். (5) விலங்கு வேளான்மை. (6) கடற்றொழில். (7) ஒரு பிராந்தியத்தினுள் வானவியல், சூழல் பாதுகாப்பு. (8) கைத்தொழில்களும் கைத்தொழில் அபிவிருத்தியும். (9) சக்தி (10) போக்குவரத்து (11) சிறிய துறைமேடைகளும் துறைமுகங்களும். (12) வீதிகளும் நீர்மார்க்கங்களும். (13) வீடமைப்பு நிருமானம். (14) நகர திட்டமிடல் (15) கிராமிய அபிவிருத்தி (16) உள்ளூராட்சி (17) கூட்டுறவுகள் (18) பிராந்தியத்தினுள் உண... வினையோகமும் பகிர்ந்தளிப்பும் (19 உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்த... (20) பகிரங்க அரங்காடல் உட்பட... பிராந்தியத்தினுள் கலாச்சா... நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த... (21) தொலைக்காட்சி உட்பட... ஒலிபரப்பும் செய்தித் தொடர்... சாதனங்களும் (22) நிவாரணம்... புனர்வாழ்வ, பனரமைப்பு. (23) சமூக... பாதுகாப்பு (24) அரச காணியும் அதன... பாரதீனமும் அல்லது கையுதிர்ப்பு... (ஒதுக்கப்பட் ஒரு விடையப்பொரு... தொடர்பில் மத்திய அரசின... நோக்கங்களுக்குத் தேவைப்படும், ஒரு... பிராந்தியத்திற்குற்பட்ட அரச காணி... இயைபான பிராந்திய சபையின... கலந்தாலோசனையுடனும்... சட்டத்தினால் தாபிக்கக் கூடி... அத்தகைய நடவடிக்கை... முறைகளுக்கு இணங்கவும் மத்தி... ஆரசால் பயன்படுத்தப்படலாம்). (25... பிராந்தியப் பொலீஸ், சட்டம்... ஒழுங்கமைதி (26) சிறுவ... நன்நடத்தை நிறுவனங்களையும்... சீாதிருத்த நிறுவனங்களையு... நிருவகித்தல் (27) பிராந்திய மட்டத்தி... திட்டமிடல்.

(ஆ) ஒதுக்கு நிரல் (மத்தி... அரசு நிரல்)

(1) பாதுகாப்... தேசியப்பாதுகாப்பு, தேசியப் பெலீஸ... பாதுகாப்புப் படைகள். (2) குடிவரவு... குடியகல்வு, பிரஜவுரிமை (3... வெளிநாட்டு அலுவல்கள் (4... நாணயம், வெளிநாட்டுச் செலாவணி... சருவதேச பொருளாதார உறவுக... பணக்கொள்கை (5) தேசிய பல்கலைக்கழகம்

( வாசகர்களாகிய உங்களுக்... சுருக்கப்பட்டே சுமைகளா... தரப்பட்டுள்ளது.)

படிப்பகம்

எந்தவர்க்கம் ஆதிக்கத்தில் உண்டோ, அவ்வர்க்கத்தின் சிந்தனையே சமூகத்தை ஆள்கிறது! **De herskenede tanker er de herskenede klassers tanker!**